# மரபுக் கவிதைகள்

## 1. முடியரசன்

| | |
|---|---|
| **புனைப்பெயர்** | முடியரசன் |
| **இயற்பெயர்** | துரைராசு |
| **தந்தையார் பெயர்** | சுப்பராயலு |
| **தாயார் பெயர்** | சீதாலட்சுமி |
| **பிறந்த ஊர்** | பெரியகுளம் ( தேனி மாவட்டம்) |
| **காலம்** | 1920 முதல் 1998 வரை |
| **பணி** | காரைக்குடியில் உள்ள மீ.சு உயர்நிலை பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார். |
| **பட்டம்** | கவியரசு குன்றக்குடி அடிகளாரால், பரம்பு மலையில் நடந்த விழாவில் வழங்கப்பெற்றது. |
| **பரிசு** | பூங்கொடி என்னும் காவியத்திற்காக 1966 ஆம் ஆண்டு தமிழக அரசின் பரிசை பெற்றார் |

⇒ **இயற்றிய நூல்கள்:**

- பூங்கொடி
- காவியப்பாவை
- வீர காவியம்
- முடியரசன் கவிதைகள்

⇒ **சிறப்பு:**

- பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருள் மூத்தவர்.
- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.

## 2. வாணிதாசன்

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | வாணிதாசன் |
| **இயற்பெயர்** | எத்திராசலுா என்கின்ற அரங்கசாமி |
| **பெற்றோர்** | அரங்கத் திருக்காமு - துளசி அம்மாள் |
| **பிறந்த இடம்** | வில்லியனுார் ( புதுவை) |
| **வாழ்ந்த காலம்** | 22-7-1915 முதல் 7-08-1974 வரை |
| **அறிந்த மொழிகள்** | தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு |
| **பணி** | 34 ஆண்டுகள் தமிழாசிரியராய் பணிபுரிந்தார் |

⇒ **இயற்றிய நூல்கள்:**

- தமிழச்சி
- கொடி முல்லை
- எழிலோவியம்

⇒ **பிற நூல்கள்:**

- பொங்க பரிசு
- இன்ப இலக்கியம்
- தீர்த்த யாத்திரை
- **தமிழ் பிரெஞ்சு கையகற முதலி** என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

⇒ **சிறப்பு பெயர்:**

- கள்கவிஞரேறு பாவலர் மணி
- தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த்.
- தமிழ்நாட்டு தாகூர் மயிலை சிவமுத்து வழங்கியது

⇒ **புனைப்பெயர்:**

- ரமி

⇒ **சிறப்புகள்:**

- கவிஞரேறு
- பாவலர் மணி
- தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்'.
- **ரஷ்ய, ஆங்கில** மொழிகளில் இவரது பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

⇒ **அரசு செய்த பெருமைகள்:**

- தமிழக அரசு இவர் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்கியுள்ளது. சேலிய மேட்டில் இவர் பெயரால் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- பிரென்சு அரசு இவருக்கு செவாலியர் விருதினை வழங்கியுள்ளது.

## 3. கவிஞர் சுரதா


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| **இயற்பெயர்** | தி.இராசகோபாலன் |
| **புனைப்பெயர்** | சுரதா |
| **சிறப்பு பெயர்** | உவமை கவிஞர் |
| **பிறந்த ஊர்** | பழையனூர் (நாகை மாவட்டம்) |
| **பிறந்த தேதி** | 23-11 -1921 |
| **தந்தையார் பெயர்** | திருவேங்கடம் |
| **தாயார் பெயர்** | செண்பகம் |

⇒ **காரணம்:**

- பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரை சுப்புரத்தின தாசன் என மாற்றிக் கொண்டார் அதன் சுருக்கமே சுரதா ஆயிற்று.

⇒ **இயற்றிய நூல்கள்:**

- தேன்மழை
- துறைமுகம்
- சுவரும் சுண்ணாம்பும்
- சுரதாவின் கவிதைகள்

⇒ **சிறப்புகள்:**

- தமிழக அரசின் பாவேந்தர் விருது, தமிழக இயல், இசை, நாடக மன்றத்தின் ‘கலைமாமணி பட்டம்’ ஆகியவற்றை இவர் பெற்றுள்ளார்.
- தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறை வழங்கும், சிறந்த நூலுக்கான பரிசை இவரின் ‘தேன்மழை’ நூல் பெற்றது.
- தேன்மழை என்ற நூலில் இயற்கை எழில் முதல் ஆராய்ச்சி ஈறாக 16 பகுதிகளாக இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

⇒ **மேற்கோள்கள்:**

- “தித்திக்கும் தமிழே முத்து முத்தாய் பாடல் செய்தவர்- திருவள்ளுவர் தேன் போலே தித்திக்கும் தமிழிழே”
- “வினைச் சொற்கள் வேற்றுமை ஏற்பதில்லை வெறும் பாட்டைத் தமிழ் சங்கம் சேர்ப்பதில்லை”
- “இரட்டைக்கிளவி போல் இணைந்து வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை.
- “பாம்பெல்லாம் பூமியையே பாதமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற காரணத்தால் பாம்புக்கு “பாதம்பூ” என பெயரிட்டார். பாதம்பூ என்பதையே நாம் எல்லோரும் பாம்பு என்று கூறுகின்றோம் .

## 4. கவிஞர் கண்ணதாசன்

| | |
|---|---|
| **ஆசிரியர்** | கவிஞர் கண்ணதாசன் |
| **இயற்பெயர்** | முத்தையா |
| **ஊர்** | சிறு கூடல் பட்டி |
| **பெற்றோர்** | சாத்தப்பன்விசாலாட்சி |
| **காலம்** | 24-6-1927 முதல் 17-10-1981 வரை |

⇒ **புனைப்பெயர்கள்:**

- காரை முத்துப் புலவர் ,
- வணங்காமுடி,
- பார்வதி நாதன்,
- ஆரோக்கியசாமி,
- கமகப்பிரியா

⇒ **ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள்:**

- திருமகள்
- தென்றல்
- தென்றல் திரை
- சண்டமாருதம்
- முல்லை
- கண்ணதாசன்

⇒ **கலைத்துறை:**

- 5000க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். பல திரைப்படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். பல திரைப்படங்களை தயாரித்தார்.

⇒ **நூல்கள்:**

- கண்ணதாசன் கவிதைகள்
- அர்த்தமுள்ள இந்து மதம்
- இயேசு காவியம்
- ஆட்டனத்தி
- ஆதிமந்தி
- மாங்கனி
- கல்லக்குடி
- மகா காவியம்

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இராச தண்டனை
- ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி,
- வேலங்குடி திருவிழா,
- சேரமான் காதலி( சாகித்ய அகாடமி விருது பெற்றது).

⇒ **சிறப்பு பெயர்:**

- கவியரசு

⇒ **விருதும் பரிசும்:**

- மத்திய மாநில அரசுகளின் பல விருதுகள்
- சாகித்திய அகாதமி விருது
- அண்ணாமலை அரசர் நினைவு பரிசு.

**5. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

| | |
|---|---|
| **பெயர்** | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| **இயற்பெயர்** | கல்யாண சுந்தரம் |
| **தந்தை பெயர்** | அருணாச்சல கவிராயர் |
| **பிறந்த ஊர்** | பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு (செங்கம்படுத்தான் காடு) |
| **வாழ்ந்த காலம்** | 13-4-1930 முதல் 8-10-1959 வரை |

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் 29 வயது வரை இந்த மண்ணுலகில் வாழ்ந்தார்.
- ஆனால், தனது எளிய நடையில் முற்போக்கான சிந்தனைகளுடன் கூடிய கவிதைகளால் மக்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
- பள்ளி சென்று கல்லாமல், கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தார். தாம் வாழ்ந்த 29 வயதிற்குள் உழவர், மாடு மேய்ப்பவர், வணிகர், உப்பில தொழிலாளி என்று 17 வகையான தொழில்களில் ஈடுபட்டவர்.
- கவிஞர் பாரதிதாசனிடம் சிறிது நாட்கள் மாணவராக இருந்திருக்கின்றார். பின்னர் நாடகம், திரைப்படம் ஆகியவற்றிற்கு பாடல்கள் எழுதினார். அவருடைய திரைப்படப் பாடல்கள் மிகவும் புகழ் பெற்றவை.
- தனது பாடல்களில் உழைக்கும் மக்களின் துயரங்களையும், பொதுவுடமை சிந்தனைகளையும் வெளிப்படுத்தியவர். அஞ்சாநெஞ்சுடன் துணிவான வாழ்க்கை வாழ்ந்தவர்.
- இன்றைய தலைமுறை சிறுவர்கள் கூட முணுமுணுப்பது ‘தூங்காதே தம்பி தூங்காதே’, ‘திருடாதே பாப்பா திருடாதே’, ‘சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா’ போன்ற பாடல்கள் ஆகும். பட்டுக்கோட்டையாரை‘பட்டுக்கோட்டையார்’ என்று பெருமையாகக் கூறுவர்.

**6. மருதகாசி**

| | |
|---|---|
| **பெயர்** | அ.மருதகாசி |
| **பெற்றோர் பெயர்** | அய்யம்பெருமாள்- மிளகாயி அம்மாள் |
| **பிறந்த ஊர்** | திருச்சி மாவட்டத்தில் உள்ள மேலக்குடி காடு |
| **காலம்** | 13-2-1920 முதல் 29-11-1989. |

⇒ **சிறப்பு**

- ஏறத்தாழ 4000 திரை இசை பாடல்கள் எழுதியுள்ளார்.
- **திரையிசை கவித்திலகம்** என்ற சிறப்பு பட்டம் பெற்றுள்ளார்.
- திரைக்கவித் திலகம் அ.மருதகாசி பாடல்கள் என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு மருதகாசி அவர்கள் எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
- அதில் உழவும் தொழிலும், தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் பாடல்கள் பயன்படுத்தி தரப்பட்டுள்ளன.

**7. தாராபாரதி**

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | தாரா பாரதி |

| | |
|---|---|
| **பெற்றோர்** | துரைசாமி, புஷ்பம் அம்மாள் |
| **பிறந்த ஊர்** | திருவண்ணாமலை மாவட்டம், குவளை என்னும் சிற்றூர். |
| **காலம்** | 26-2-1947 முதல் 13-5-2000 வரை |
| **படைப்புகள்** | புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள், பூமியை திறக்கும் பொன் சாவி, இன்னொரு சிகரம். |
| **பணி** | ஆசிரியராக 34 ஆண்டுகள் பணியாற்றினார். |
| **விருது** | நல்லாசிரியருக்கான டாக்டர்.ராதாகிருஷ்ணன் விருதினை பெற்றவர். தன்னுடைய புதுக் கவிதைகளால் புரட்சி படைத்தவர். |

### 8. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

| | |
|---|---|
| **ஆசிரியர்** | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| **இயற்பெயர்** | துரை.மாணிக்கம் |
| **பெற்றோர்** | துரைசாமி குஞ்சம்மாள் |
| **காலம்** | 10 -03-1933 முதல் 11-06-1995 வரை |
| **பிறந்த ஊர்** | சேலம் மாவட்டம் சமுத்திரம் |

⇒ **இயற்றிய நூல்கள்:**

- கனிச்சாறு
- ஐயை
- கொய்யாக்கனி
- பாவியை கொத்து
- பள்ளிப் பறவைகள்
- நூறாசிரியம்.

⇒ **சிறப்பு:**

- பாவேந்தர் பாரதிதாசனின் தலை மாணாக்கர்.

⇒ **தமிழ் தொண்டு:**

- தென்மொழி
- தமிழ்ச்சிட்டு
- தமிழ்நிலம்

ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழ் உணர்வை வளர்த்தார்.

### 9. பள்ளியகரம் நீ. கந்தசாமி புலவர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | நீ.கந்தசாமி |
| **பெற்றோர் பெயர்** | நீலமேகப் பிள்ளை- சௌந்தரவல்லி அம்மையார் |
| **பிறந்த ஊர்** | தஞ்சையின் புறநகர் பகுதியில் தற்பொழுது 'பள்ளியக்கிரகாரம்' என்று வழங்கப்படும் பள்ளியகரம். |
| **காலம்** | 9-06-1898 முதல் 18-06-1977 வரை |

⇒ **கல்வி:**

பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றவர். சொந்த முயற்சியாலும், பல்வேறு அறிஞர் பெருமக்கள் தொடர்பாலும், தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றுத் தேர்ந்து பெரும்புலவராக விளங்கினார்.

⇒ **பன்மொழிப் புலவர்:**

அவர் தாமே முயன்று ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன், வடமொழி ஆகிய மொழிகளை கற்று அம்மொழிகளிலும் புலமை மிக்கவராய் திகழ்ந்தார்.

⇒ **தமிழ் தொண்டு :**

கரந்தை தமிழ் சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராக விளங்கி உள்ளார்.

⇒ **படைப்புகள்:**

ஆங்கிலத்திலும், தமிழிலும் பல நூல்களைப் படைத்துள்ளார். '**தாமஸ் கிரே**' என்பார் எழுதிய ஆங்கில கவிதை ஒன்றை தமிழில் செய்யுள் வடிவில் '**இறங்கற்பா**' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in